5th August 1966]

வாங்கியவர்களைக் கட்டாயப்படுத்தித் தான் தமிழிலே ஒரு சில மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். ஆகையால், அரசாங்கம் இந்தக் கொள்கையை விட்டு, கல்லூரியில் தொடர்ந்து ஆங்கிலத்தையே பயிற்சி மொழியாக எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக்கொள்வதற்கு மாணவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்று கூறுவதற்கு இடமில்லை. ஆங்கிலத்திலும் படிக்கலாம், தமிழிலும் படிக்கலாம். மாணவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதை எடுத்துக்கொள்ளலாம். இறுதி லட்சியம் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது என்பதை முன்பே குறிப்பிட்டேன். ஆகையால், இப்போது மாணவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அதைக் கைவிடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இறுதி லட்சியம் தமிழைப் பயிற்சி மொழியாக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆங்கிலத்தையும் பயிற்சி மொழியாக வைத்துவிட்டு, ஆங்கிலம் படித்தவர்கள் உயர்தரப் படிப்பு படிக்க முடியும், உயர்ந்த உத்தியோகத்திற்குப் போக முடியும் என்ற வாய்ப்புகளையும் வைத்துவிட்டு, தமிழைப் பயிற்சி மொழியாக வைத்திருக்கிறோம், வந்து சேருங்கள் என்றால் எப்படி மாணவர்கள் தமிழில் படிக்க வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்படிப்பிற்கு வெளி நாட்டிற்குப் போகவேண்டும் என்பதற்கெல்லாம் தமிழில் மட்டும் படிக்கவேண்டுமென்று சொல்லமுடியாது. ரஷ்யாவில் கூட இந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது. உயர்தர உத்தியோகத்திற்கு யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தமிழைப் பரிட்சை மொழியாக ஆக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் சர்விஸ் கமிஷன் பரிட்சையை முற்றிலும் தமிழிலே எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மொழியிலே படிப்பதற்கு மேலும் மேலும் ஊக்கத்துடன் மாணவர்கள் முன்வருவார்கள் என்பதிலே எனக்கு ஐயம் இல்லை.

* 103 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken and arrangements made by this Government for making Tamil also as a medium in the Examinations to be conducted by the U.P.S.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : During the Chief Ministers' Conference held at Delhi on 23rd and 24th February 1965, the importance of ensuring equality of opportunity in the Union Public Service Commission Examination as enjoined by the Constitution as between people belonging to different parts of the country was emphasised. It was also urged that every regional language should be admitted as one of the alternative media for the combined All-India Public Services Examinations. The whole

[5th August 1966

question is now being examined by the Government of India in consultation with the Union Public Service Commission. No decision has so far been communicated to this Government.

திரு. வை. சங்கரன் : அந்தக் காலத்திலேயே இதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியில்லாவிட்டாலும்கூட நமது அரசாங்கம் இதை விரைவிலே கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்துவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும். இதில் தாமதம் இருக்கிறது என்று சொல்வதற்கு இடம் இல்லை.

நெல்லையில் அரசாங்கத் தமிழ்க் கல்லூரி

* 104 கேள்வி.—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரையில் சர்வகலாசாலை வருவதையொட்டி மதுரை, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு நடு நாயகமாக விளங்கும் நெல்லையிலே அரசாங்கத் தமிழ்க் கல்லூரி ஒன்றும், தமிழ்ப் புலவர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் வருகிற கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்க, அரசினர் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal now.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த ராஜ்யம் முழுமையிலும் உள்ள தேவாலயங்கள், அறநிலையங்களினுடைய நிதி வசதி பெற்று ஏதாவது ஒரு பிரதான இடத்தில் திருநெல்வேலி அல்லது பெரிய தேவாலயங்களுக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க் கல்லூரியை வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆலயங்களுக்குப் பக்கத்தில் சில கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்க் கல்லூரி அங்கு ஏன் இருக்கவேண்டும், அதன் லட்சியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. தமிழர்கள் எந்தெந்த வகையில் பயன் அடைய முடியுமோ, அந்த முறையிலே கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Government Arts College, Ootacamund

* 105 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the construction work of the Biology Block in the Government Arts College, Ootacamund, has been suspended in view of the emergency?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. The work in question was ordered to be suspended because the allotment made for the work for 1965–66 was fully utilised. Permission has since been accorded to proceed with the work.